உ

சிவமயம்.



# கதிர்காம யாத்திரைப் பாராயணப் பிரபந்தம்.

நாவலர் அச்சுக்கூடம்,
யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்.

# கதிர்காம யாத்திரைப்

# பாராயணப் பிரபந்தம்.

சி. சி. சண்முகலிங்கம், லிகிதர், காணிப்பதிவுக்கந்தோர், யாழ்ப்பாணம்.
பொ. கந்தையனார், பண்டிதர், அமீனர் தமிழ்கலவன் பாடசாலை,
தெமட்டக்கொடை, கொழும்பு.
மு. துரைச்சாமி, ஆசிரியர், தமிழ்கலாசாலை, அரஸ்பத்தை, ருகலை.
க. சுப்பிரமணியம், கிருஷிக கற்பனையாளர், தென்மராட்சி கிழக்கு,
கொடிகாமம்.

இவர்களால்,

யாழ்ப்பாணம், நாவலர் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

இஃது
கதிர்காம யாத்திரீகர்களுக்கு இலவச விநியோகம்
செய்யப்படும்.

1954

—[பதிப்புரிமை வரையறுக்கப்பட்டது.]—

# மதிப்புரைகள்.

(1)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் தமிழ்ப்பேராசிரியர் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள் "கதிர்காமயாத்திரைப் பாராயணப் பிரபந்தம்" என்ற புத்தகத்துக்குதவிய மதிப்புரையின் ஒருபகுதி: —

கதிர்காமக்ஷேத்திரமும் கந்தபுராணமும் இந்த நாட்டிலே பழைய பரம்பரையைச் சேர்ந்த ஒரு சிலரின் கண்களைத் திறந்து திகைக்க வைக்கின்றன. அவர்கள் "ஓ" என்று புலம்பி அந்த ஓங்கார மூர்த்திக்கும், ஒரு திருமுருகனுக்கும் முறையிடு செய்கின்றார்கள்.

இந்த முறையில் எழுந்தவைகள் "கதிர்காமயாத்திரைப் பாராயணப்பிரபந்த"ப் பாடல்கள், புத்தகமுன்னுரை என்னைப் பெரிதும் வசீகரித்து விட்டது. பாட்டின் இசையும், சொல்லொழுக்கும் நல்லாயிருக்கின்றன. பாடல்களிலே கச்சியப்பசிவாசாரிய சுவாமிகளின் திருவடிப்பூதூளிகள் படிந்திருக்கின்றன. சில பாடல்களிலே அருள் வள்ளலாகிய அருணகிரிநாதரின் சந்தம். தாயுமானசுவாமியின் அடிச்சுவடு தோன்றுகின்றன.

இப்பிரபந்தத்தை ஆக்கித்தந்த ஸ்ரீமாந். சின்னையா ஆசிரியர் அவர்களுக்குத் திருமுருகன் திருவருள் சித்திப்பதாக.

இங்ஙனம்

பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை
தமிழ்ப்பேராசிரியர்.

திருநெல்வேலிச் சைவாசிரியகலாசாலை,
20—7—54.

(2)

"கதிர்காம யாத்திரைப்பாராணப்பிரபந்த"க்கவிகள் பொருட்செறிவும், சொற்செறிவும் பொதிந்துள்ளன. படிக்குந்தோறும் இன்பம் பயப்பன. அருணகிரியார், தாயுமானர், கச்சியப்பசிவாசாரியார், பரஞ்சோதிமுனிவர் முதலாம் அறிவுச்சோதிகளின் அரிய பாதையை அவாவுவன.

எமது சமூகம் இழந்த பண்பாட்டை மீளவும் பெறச் செய்ய வேண்டுமென்பதே இந்நூலை ஆக்கியவரது அவா.

பக்தர்கள் சித்த சுத்தியுடன் கதிர்காம யாத்திரை செய்யுஞ் சமயத்திற் படித்தால் அவர்களுடைய மனத்திற் பதியக்கூடும் என்ற துணிபினாலேயே இவ்வரிய பிரபந்தத்தை அவர்களுக்கு இலவசமாகக் கொடுத்துதவும் பரநலப் பணியை ஆக்கியோன் மேற்கொண்டார்போலும்.

இவ்வரிய பணியாலாம் செலவைச் சைவாசிரியசமூகத்திலிருந்து பெறுவதென்ற ஆக்கியோனது சிறந்த முடிபால் சைவாசிரியர்கள் சமூகத் தொண்டர்களாகுஞ் சந்தர்ப்பம் தானே கைகூடியது என்பதும் அதுசிறந்த விஷயங்களோடு வெளிவரவிருக்கும் அடுத்தபதிப்பிற்கும் உதவியவர்கள் என்பதும் மிகையாகாது.

ஆக்கியோனுக்கும், பொருள் அர்ப்பணித்த—அர்ப்பணிக்கும் அன்பர்களுக்கும் கதிரைநாதன் கருணை புரிவாராக!

சைவவித்தியாசாலை
காம்பைக்குறிச்சி வரணி,
27—7—54.

இங்ஙனம்
பண்டிதர் ம. முருகேசு.
தமிழாசிரியர்.

(3)

அன்பர் சின்னையா அவர்களாற் பாடப்பெற்ற கதிர்காமயாத்திரைப் பாராயணப் பிரபந்தத்தைக் கருத்தூன்றிப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவற்றைப் படிக்கும்போது அருணகிரிப் பெருந்தகையின் நடையும், குமரகுருபரசுவாமிகளின் பக்தியும் கலந்து தாண்டவமாடுவதை அன்பர்கள் யாவரும் உணரலாம். முருக பக்தர்கள் படித்துக் களிப்புறுவதற்கேற்றதோர் பிரபந்தமாகும்.

முருகன் அருள் பொழிக!

இங்ஙனம், அன்புள்ள,
நா. முத்தையா
பதிப்பாசிரியர்
"ஆத்மஜோதி"

ஆத்மசோதி நிலையம்,
நாவலப்பிட்டி,
27—7—54.

—உ—

# முகவுரை.

சச்சிதானந்தப் பரம்பொருளுக்கு வகுக்கப்பட்ட மூவகைத் திருமேனிகளுள் உருவம், அருவுருவம் என்னும் இரண்டிற்கும் அபிஷேகஞ் செய்கின்ற திருமஞ்சனத் திரவியங்களுட் சிறந்த பஞ்சகௌவியத்தைத் தருவனவும், சைவசமயத்தவர்களால் தெய்வப் பிறப்புக்களென மதிக்கப்படுவனவுமாகிய பசுவினத்தைக்கொன்று மாமிசத்தைப் புசிப்பவர்களும், சமீபகாலத்திலே புல்லுருவியைத் தெய்வம் என்று வழிபட்டவர்களும், கரிக்கட்டியிலும் நெருப்புப் பற்றப் பின்தும் சீதள சுவாத்தியமுடைய நாட்டில் வசிப்பவர்களுமாகிய அந்நியர்களால் ஏறக்குறைய மூன்று தலைமுறைகாலம் வரையில் ஆளப்பட்டுவந்தமையாலும், அவர்களுடைய சரித்திரம், இலக்கியம் என்பன கல்விப் பகுதியின் பாடத் திட்டத்தில் திணிக்கப்பட உத்தியோகத்தையே விரும்பி அவர்களுடைய பாஷாமோகங்கொண்டு சுதேச பாஷையைப் புறக்கணித்து ஆங்கிலக் கல்வி பயின்றமையால் வாழைமரம் தானுக நெருப்புப் பிடித்து எரிந்துவிடக்கூடிய உஷ்ண சுவாத்தியமமைந்த எங்கள் நாட்டுக்குரிய பண்பாடுகளனைத்தையும் கைவிட்டு ஆஸ்திகக் கல்வி, அறிவு, ஒழுக்கங்களை இழந்து லோகாயதக் கொள்கையையுடைய நாஸ்திகத்தைக்கடைப்பிடித்தமையாலும் செல்லவேண்டியதிசைக்கு எதிர்த்திசையாகக் கீழ்நோக்கி அதிவேகத்துடன் போய்க்கொண்டிருக்கும் சமூகத்தைத் தடுத்துநிறுத்திச் சரியான பாதைக்கு இட்டுச்செல்லும் பொறுப்புத் தாய்மாரையும், ஆசிரிய சமூகத்தையுமே பொறுத்த விஷயம்.

சிறுவர் சமூகத்தை மாத்திரமே மேற்குறிப்பிட்டபடி தாய்மாரும், ஆசிரியர்களும் வழிநடத்தமுடியும். அதற்கும் அரசாங்கத்தினுடைய பாதுகாப்பும், பொருளுதவியும்,

நிபந்தனையும் சிறிது தேவைப்படும். மற்றை வளர்ந்தவர் களிடத்தும் பரவிவரும் நாஸ்திகத்தைக் காலந்தாழ்த்தா மல் போதிய கவனமெடுத்து நீக்கி ஆஸ்திகத்தை வளர்க்க அரசாங்கம் உடனே தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இப்பிரபந்தத்தில் ஆங்காங்கு எங்கள் நாட்டுக்குரிய பண்பாடுகளை ஆதரித்தும், பொருத்தமற்றவைகளைக் கண் டித்தும் 'முருகனை' வேண்டுகோள்செய்து கூறப்பட்டிருக் கின்றன.

இப்பிரபந்தம் ஆக்கிய காலம், இடம், காரணம், குறிக்கோள், பாக்களின் நயங்களை விளக்கும் குறிப்பு, மதிப்புரைகள், இந்தப் பதிப்பிற் சேர்க்கப்படாத பாக் கள் ஆகியன சேர்ந்த இரண்டாம் பதிப்பு, அடுத்தமன்மத வருடம் (1955) ஆடி மாதத்தில் வரும் கதிர்காம உற்சவ தினத்துக்குமுன் அச்சிட்டு விநியோகிக்கப்படும்.

கச்சாய்.
11—5—54

சி. சின்னையா.

## அவையடக்கம்.

ஐந்துசீர் விருத்தம்.

கொற்ற வேற்படை நம்பிதன் புகழ்பல குறித்துக்
கற்று வல்லுநர் பாடுகின் றார்தமிட் கவிகள்
மற்று நான்கவி பாடிடி னென்னென மதித்துச்
சொற்ற னன்சில விருத்தமுங் கலித்துறைத் தூக்கும்

அங்கை யிற்பல போகங்கள் வைத்திருந் தவைகள்
எங்க ளுக்களித் தருள்கும ரேசனல் லிசைகள்
தங்கு மாதலிற் சிலவிவை கொள்வர்தண் டமிழ்நூற்
பொங்கு மாகடல் கடைந்தமிழ் துண்டமெய்ப் புலவோர்.

## தெய்வ வணக்கம்

விநாயகர்

பதினொன்குசீர் ஆசிரிய விருத்தம்.

மூலா கமங்கள் மறையே முதல்பல்
கலையாதி யாகி முடிவாய்
மூத்தேவர் கட்கு முடியாத யாவு
மடியார் பொருட்டு முடியும்
மேலான சீல வினையாற்றி நல்ல
விகடங்கள் செய்த விமலா
வெயிலாதி கோள்கள் வலமான வெற்பின்
மிகுபா ரதத்தை யெழுதுங்
கோலாக நீடு பிறையான கோடு
கரமீ தெடுத்த குருவே
குறியோ னுடன்செல் விரிநீர் தடுத்து
மலர்கா விடுத்த பரனே
வேலா யுதங்கை குடிவாழும் வீர
முருகேச னுற்ற கதிரை
மிளிரா லயத்து வலமா யுறைந்த
விரிமா மதக்கைம் முகனே.

## சிவபெருமான்

12 சீர் ஆசிரிய விருத்தம்.

திருவிளங் ககலமுடை யரிசலந் தருகமல
திசைமுகன் மகபதிமுதற்
செறிதரும் புலவர்பலர் பலதினம் படுதுயர்கள்
திருவுளந் தனிலமையவே
ஒருசுதன் றனைவிழியி னறுமுகம் பெறவுதவி
யுயர்கணங் களையுமுதவி
ஒளிபெறுந் திரிநுதிக ளிருபுறந் திகழயிலு
முதவிவென் றசுரர்களை நீழ்
தருவிரும் பியவைதரு பசுமிகுந் திருவுடைய
தலநிலம் புலவர்பெறவே
தருதியென் றருளியறு முகனைமுன் சமர்புரிகை
தகைமையென் றணைய விடுவோய்
கருவிலிங் குறுதுயர மெமையகன் றிடவுபய
கழலினின் னருள் புரிகுவாய்
கயிலையங் கிரியில்வரை யுமையிடம் பெறுமுதல்வ
கருணையின் வடிவினிறையே.

## உமாதேவியார்.

அற்றவர்கள் சாலையறு சமயத் தவர்க்குண்டி
யன்னமா விற்குணவு கண்
ணாடியவு டதமகப் பேறுதண் ணீர்ப்பந்த
ரருமக வளர்த்தல்வண் ணார்
கற்றவர்க் குணவெண்ணெய் காதோலை பெண்சுகங்
கண்மருந் தரிவைதானங்
காத்தல்பிற ரிற்சோலை வல்விலங் குணவாடை
கன்மடஞ் சிறையிலன்னம்
மற்றுயிர் வருத்தங்கள் விலைகொடுத் தேதீர்த்தல்
வற்சலை யுரிஞ்சுதறிதின்
வகைநல்க லறவையின் தூரிய மனாதபிண
மாற்றல்மக வமிழ்தேறுகோள்

முற்றுநா விதர்தடஞ் சுண்ணமெண் ணுன்கறம்
முன்வளர்த் தருளன்னையுன்
முளரியித ளனைய திருவடியருண் முகிழ்த்திடுக
முன்னிவழி படுமெமக்கே.

**வேலாயுதம்**—ஐந்துசீர் விருத்தம்.

வெள்ளை வேலைவந் தமரரைத் தூக்கிய வேலை
கள்ள நஞ்சயின் றமுதுண வளித்தருள் கடவுள்
பிள்ளை யாயுவர் வேலையைச் சுவற்றிய பெருமான்
வள்ளி கோன்கர வேலைநாம் வணங்குதல் வேலை.

**கலைமகள்**—வெண்பா.

வெள்ளைக் கமலமலர் மீதமர்வாள் மேதினியோர்
உள்ளத் துரையி லுவந்திருப்பாள்—அள்ளிக்
கொடுக்கக் குறையாக் கலைக்குவைக்குக் கோவி
னடிக்கமல மெம்முடிமே லாம்.

**சாத்தற்கடவுள்**—கட்டளைக் கலித்துறை.

போர்புரி யேனென்று வில்லெறிந் தோனைப் பொருகளத்தின்
ஓர்புற மாக்கொண்டு சென்றங்கு கீதையென் றோதரிய
பார்புகழ் சாத்திரத் தேகன்ம யோகம் பகர்ந்து நட்ட
மார்பிடை யாக்கத்தை வைத்தருள் வோனை வணங்கல் செய்வாம்.

**கலி விருத்தம்**—காப்பு.

முன்னெ வைக்குமுன் னாகிய மூர்த்தியைப்
பன்னி ரண்டு கரன்புகழ் பாடுவான்
உன்னு மேல்வை யுளத்தி னுரையினீழ்
சென்னி யிற்கொடு சீரடி போற்றுவாம்.

**தலப்பெருமை.**

பொன்னில் வைத்தொளிர் மாமணி போன்றபூந்
தென்னி லங்கைத் திருநகர்ச் சேனுயர்
கன்னல் பூகங் கதலிதெங் காசினி
இன்ன சூழ்கதிர் காம மெனும்பதி 1

மதிவ ரைக்கும் வளர்ந்த வரைக்குமேன்
முதிட் கருக்கொண்முகிற்குழு மொய்த்துமண்
புதைய வார்க்கும் புதுப்புனன் மாமணி
நதியெ னப்பெயர் நண்ணிநின் றோடுமே 2

அந்த திக்குத் தரக்கரை யண்மையிற்
பன்னி ரண்டு கரப்பெரும் பண்ணவன்
மன்னி வந்தனை வந்தடி யார் செய
என்ன வேண்டினு மீந்துறைந் தானரோ 3

உண்டி நீக்கி யுணர்ச்சியை யோர்வழிக்
கொண்டு காம முதற்குறை கொன்றிருந்
தண்டர் சேனை யதிபனை நாடினோர்
மண்ட லத்துயர் வானவ ராவரே 4

காடு சூழ்கதிர் காமத்திற் காவடி
யாடு வோர்களு மாடி யவன்புகழ்
பாடு வோர்களும் பாடி யவன்கழல்
சூடு வோர்களு மெண்ணில் தொகையரோ 5

அரக ராவென வன்பினிற் கூறியே
வருவ ராயிரர் மற்றவ ராயிரர்
ஒருவ ராயினும் "ஓம் முரு கா" வென
உரைசெய் வாரல தொன்றுமற் றில்லையே 6

சாமி வாருங்க ளென்ற தகுமுரை
தாமு ரைப்பதை யன்றிச் சகலரும்
நாம மொன்று நவின்றதைக் கேட்டிலேந்
தீமை நீக்குஞ் செழுங்கதிர் காமத்தே 7

### வேறு சந்தம்.

ஆறுதலை வேண்டியிறை யாறுதலை வேலீ
ராறிருகை யாறிருகண் ணார்தெரிவை யார
ஏறுமயில் சேவல்விழி யேறவுரை சீர்பேர்
கூறியடி யார்களயர் வார்நிலை குலைந்தே 8

அற்றவர்கள் செல்வர்க ளருங்கலை யனேகங்
கற்றவர்கல் லாதவர்கள் கன்னியர்கள் பெண்கள்
பெற்றசிறு பாலர்பெரி யோர்கள்பிரி யங்கொண்
டுற்றுவழி பட்டருள்பெற் றுய்வர்கதிர் காமம் 9

தீந்தமிழ் மொழிக்குரை தெரித்தருள்செவ் வேளைப்
போந்துமணி யாறுபுடை சூழ்கதிரை போற்றின்
வாய்ந்தகலை ஞானமுறும் மன்னவன் மதிக்கும்
ஏந்துரக மாநில மிசைக்குமுறும் வாழ்வே 10

வஞ்சக முதற்பல மவிந்துறையு மெந்தன்
நெஞ்சக மலைக்குமிசை நின்றகும ரேசன்
செஞ்சரண வாரிச திறங்கதிரை சேர்ந்தே
யஞ்சலிசெய் வோரைவினை யஞ்சியயல் போமே 11

தாரணி தழைக்கவரு சண்முகனை வானிற்
காரணி மலைககதிரை கண்டுதுதி செய்வோர்
போரணி படப்புரி புறப்பகையை வென்றே
சீரணி படத்திருவின் வைகுவர் செகத்தே 12

வன்னமயில் வாகனனை வாழ்கதிரை மேவிக்
கன்னியர்க ளீர்புடை கலந்துறைதல் கண்டால்
என்னபயன் வேறுவிழி யெய்தவுடல் விட்டே
இன்னவர்கள் வானர சிருப்பவர்க ளாமே 13

வள்ளியை மலைக்கதிரை வாழ்புனம் வரைத்த
கள்ளமுரு கேசனடி கண்டுதொழு மன்பர்
பிள்ளைமுத லானபெறு பேறவைகள் பெற்றே
யுள்ளமகிழ் வார்புவி யுரைக்கநனி யுற்றே 14

செந்திமுத லானபல தெய்வதல மோடென்
சிந்தையிட மாகவிளை யாடியருள் செவ்வேள்
வந்துகதிர் காமநகர் வந்தனைசெய் வார்தம்
புந்திமகி ழாக்கமிகு போகமருள் வானே 15

நீறுசடை காவியுடை நீடுநல் வேடம்
ஏறுதவ ஞானியித யாலய மிலங்கும்
ஆறுபுடை சூழ்கதிரை யண்ணலடி போற்றும்
பேறுபெறு வார்கள்மிகு பேறுபெறு வாரே. 16

## விநாயகர் வணக்கம்.

பதினான்குசீர் ஆசிரிய விருத்தம்.

திருமதி வரநதி யுடைசடை முடியுந்
தெரிதரு கலையரு நிதிதாமுந்
திறலழ கிளமைகள் வருமிகு சுகமுந்
திரிவித மதமடி யவர்பாலே
தருகறை யடிமுக மொருபுரி யுலவை
தகுபுழை வருகர மொடுசேருஞ்
சதுர்வித வரதமங் குசமப யமுநீடு
சரிகயி றிவைபெறு கரமேலோன்
அருள்புரி யானிடை பெறுதச முகனல்
லருவுரு வடிவதை நிலமீதே
அமையமுன் னிறுவிய சிறுவனில் வருநிலை
யளவிட முடிவறு பெரியோனே
கருமமுன் னெவருங் கருதிய முதல்வன்
கதிர்வரு புனமொரு கரியாகிக்
கரவயில் முருகன் பெறவருள் புரியுங்
கதிரையில் வலமுறை பெருமானே.

1. வழிகளி னெடுகப் பரல்மணல் வரையும
மனிதர்க ளுறைவயன் மருதூரும்
வனசர ருறைபுழை மரவட விகளும்
வருபுலி கரடிக ளரவானை
உழைகளு மரையும் முதலைக ளுறையும்
நதிகளு மிடையுவர் வெளியூரும்
ஒழுகிய மழையும் பனிகடு வெயிலும்
உறவிவை பலதின நடையேறிக்
குழைகிழி நயனக் குலமக ளிடமுங்
குறமகள் வலமுங் கொளமேவிக்
கொடியரை யரியுந் திருநெடு வடிவேல்
கொடுகர மிலகச் சிறையாரும்

அழகிய மயிலின் புறமுறு நின்தா
 முருள்பெறு குறிகொண் டமைவேட்
அரிவையர் குரவைப் பெருநட மிடுதென்
 கதிரையி லுறுவர்க ளடியாரே.

2. அணிமா முடியிற் கரமே லுறநின்
 றழுவார் தொழுவார் விழுவார்கள்
அதன்மே லெழுவார் வலமாய் வருவார்
 அரிதா கியநல் லுரைகூறிப்
பிணிமா முகமென் பிடர்மே லுறநின்
 பெரிதா மருள்பெய் முகநோக்கிப்
பிரியா மலுறுந் திருவா ரிருபெண்
 பெறுநா ரியர்தம் முறுசார்பும்
மணிமா நதியின் கரைமே லெழிலா
 யுயர்கா வடிகொண் டடியார்கள்
வருவார் வருவா ரெரிமே லுறுவார்
 அவர்பா தமிசைப் பலபேர்கள்
துணிபாய் நயனங் களையே விடுவார்
 சுடர்மே லெழுகர்ப் புரதீபந்
தொடர்பாய் முடிகொண் டிடுவார் சுழல்வார்
 சுமையாய்க் கதிரைப் பெருமானே.

3. உலகினில் வருமிச் சடலிவ காரத்
 தொருசத மேனும் பெறுமாறு
யுயர்தரு மானம் பெருமைக ளறமற்
 றெவரிட மேனும் மிரவாமற்
தலைவிதி யென்னுங் கழிபிற வியில்முன்
 புரிவினை சுகமுந் துயர்யாவுந்
தருமெனு மறையின் முறையிடு முரையைப்
 பெறவறி வுணர்விற் றருவாயே
கலையறி வாலும் மறிஞர்க ளுரைநன்
 மொழியவை யாலுங் கனதீமை
களைவிட வருள்வாய் கருதலர் புரியக்
 கருதிய கொடுமைகள் புரியாமல்

நிலைதடு மாறப் புரிகுவை நினதாழ்
நினைபவ ருறவைத் தருவாயே
நெடுமுகில் குழறிச் சுழல்கதிர் காமத்
தருள்மழை பொழியும் பெருமானே.

4. தொடுகட னடுவட் படவர வணையிற்
துயில்புரி வளைதண் டொடுநேமி
சுரிகை தனுப்படை யடையுமடற்கர
முடைய திருப்பதி மலர்மேலோன்
அடிமுடி தடவித் தடவி நெடும்பக
லவைகெட வஞ்சித் தடுமாறி
அவலம தாகிக் கருவ மடங்கிப்
புவியிடை யண்ணித் துதிகூறுங்
கடுவிட மிடறுக் கிடைபட நிறுவிக்
ககனரை யுயிர்வைத் தருளீசன்
கனல்விழி யுற்றுப் பலபடை பற்றிக்
கடுமசு ரர்களைப் படநூறுந்
துடியிடை மடமெல் லியர்களை யிடமும்
வலமு மிருத்திய சுடர்வேலோன்
கொடர்பதி மறையைக் கிளியுரை புரியுந்
துதிகதிர் காமப் பதியாமே.

5. ககனமு முயிரும் மெரிபுன னிலமுந்
திரிதரு முடலிற் பசியாதி
கண்கெடு திகழுற் றுணையுண ராமற்
பொருள்பெற வுலகிற் றடுமாறிப்
பகலிர வெனவுங் கடுவெயி லெனவும்
பனிமழை யெனவும் புரியாமற்
பயிரிடு தொழிலும் பொருள்விலை பகரும்
பரிசிலு மரசிற் பணிவாகப்
பகைமையு நெஞ்சிற் குழறலும் வஞ்சக்
கொடுமைக ளும்மிக் குறலோடும்
பணிபுரி வதிலும் பலபகல் கழியப்
பலதுய ரமுமிங் குறலாலே

குகனரி மருகன் கதிரையில் முருகன்
குறமகள் கணவன் னுனைநாடிக்
கொடுவினை களையும் படிமுயல் வதிலென்
குறைகளை தருமெம பெருமானே.

6. மழைபொழி பருவத் துயர்வரை முடியின்
மணிமயில் நடனம் பயில் போதின்
மகிழ்குற மகளிர்க் குழுவொடு தினையின்
வளர்புன முயர்நற் பரணேறும்
உழைமக ளிலையின் மிசையிடு முணவைக்
கழிமகிழ் வுறவுண் டருள்வோனே
உலகவை புரியும் மலர்மிசை யவன்முன்
னுறுமறை யதன்முன் னுணராமற்
பிழைபடு பொழுதிற் சிறையிடை யிடுவித்
தணிபட வுலகைத் தருவோனே
பெருமைகொள் பொதியத் தமர்முனி யறியத்
தமிழியல் மொழியுங் குரவோனே
கழைசெறி பொழிலுந் தழைசெவி முறமென்
றிடுமத கரியும் மிகமேவுங்
கதிரையி லுறையுங் கரமயில் பொலியுங்
கவிஞர்கள் பரவும் பெருமானே.

7. மணிமுகி லினமின் னெடுமுடி படியும்
மலைமிசை யருளின் னடமாடி
மகிழ்புல வர்களும் நிலமனி தர்களும்
மறுகணர் களுமுன் னடிசூடிப்
பிணிகளு மிகவுள் ளுறுகவ லைகளும்
மருவலர் புரியும் பகையாதிப்
பெருமனி துயரங் களையற வொழியும்
படியருள் புரியும் பெரியோனே
பணிமிசை நடமின் றிடுவளை பணிலஞ்
சுரிகைவில் வலிதண் டணிமாயன்
பலமக னர்களும் பதிவலி புகழ்மற்
றெவைகளு மொழியப் பயில் சூரன்

திண்ணிவயி ரமுறுங் கடவரை யகலம்
புழைபட வயிலிற் செருநூறுந்
திருவிளர் கதிரைப் பதியடி யவர்கட்
கருள்மழை பொழியும் பெருமானே.

8. சுருதிக ளாலும் மறிவுணர் வாலும்
அனுபவ முதலிய பிறவாலுந்
தொடுகட லுலகும் பிறபல வுலகும்
மிறைதரு பவையெனு மிவையோரார்
குருவருள் புரியும் முதுமொழி யவைநற்
குணமுடை யனவெனு மவைதேரார்
குலவிய பொறியின் வழிபுல னுகருஞ்
சுகமவை களைவிட வெவைதாமுஞ்
சரியென மொழியார் சினகர முருவஞ்
சரியைகள் கிரியைகள் புரியோகந்
தவமெனு மொழிவா ருலகுறு பொருளிற்
சமமென வெவரும் பெறுமாறே
உரிமைய தெனவல் லுரைபல பகர்வார்
பொருள்பெறு வதுமுன் தவமாமென்
றுளசுரு திகளும் பிழையென வருவார்
ஒளிர்கதி ரையில்வளர் பெருமானே.

9. கருவினில் மருவும் பொழுதியல் தொழிலுங்
கனதுயர் சுகமும் பெறுமாயுள்
களுமெனு நாளும் வரையறை படுமென்
றுரைதரு விதியைக் கருதாராய்த்
தரைதனி லயலிற் படுமவர் பெறுமற்
றவைகளெவ் விதமும் பெறுமாறுய்த்
தருபக லிரவிற் பகிரத பிரயத்
தனமவை புரியும் மடமாந்தர்
நரைதிரை யவைவந் தடையினு முயர்நல்
லறிவொரு சிறிதும் பெறுவாரோ
நகைபுரி குவரிப் பதர்மணி தர்களைத்
தெரிதரு முயர்நல் லறிவாளர்
வரதமொ டபயஞ் சுடரயில் வயிரங்
கொடிசுரி கைமழுக் கதையாதி
வருபடை பொலியக் கதிரையி லிருசத்
திகழ்புடை மருவும் பெருமானே.

10. உடல்மெலியாமற் கொலையினில் வருபுன்
புலவுகள் கடலிற் படுமீனும்
உரைதரு பசுநெய் சிலபயிர் விதைகள்
ஒருசில கனியிலை யுயர்காய் நன்
படுமிவை யயல்நா டியல்தரு பலமா
வகைபக விரவுண் பவராமே
பலவித நயமுந் தருமுயர் திலநெய்
தலையிடன் முழுகுவ திவரோரார்
கெடுதிக ளுணரார் பசைதலை யிடுவார்
பசுமல பொடியின் பதிலாகக்
கிளர்துத றனிலும் பொடிவித மணிவா
ருயிர்பெறு முறுதிக ளிவையாமோ
திடமிலை யுடலும் மூலகுறு பொருளுஞ்
சிறிதணு வளவென விவையாயார்
தெரிகில ரெவைசெய் வணவென வருள்வாய்
திகழ்கதி ரையில்வளர் பெருமானே.

## பன்னிருசீர் ஆசிரியவிருத்தம்.

11. பெற்றா ரிருந்தென்ன சுற்றமு மிருந்தென்ன
பிள்ளைக ளிருந்துமென்ன
பிரியமுறு மனைவியுந் தனதானியங்களும்
பெரியோரு முறவினர்களும்
மற்றா ரிருந்தென்ன வாய்வல்ல பங்களும்
மணிமந்ர வித்தை முதலா
வருசம்ர தாயமு முபாயமு மிருந்தென்ன
மாளிகை யிருந்துமென்ன
கற்றா ரிருந்தென்ன செல்வர்க ளிருந்தென்ன
காணுமுட லழகிளமைபேர்
கன்றுகாலி களிருந் தென்னவரு காலனைக்
காப்பதற் குறுதியுண்டோ
நற்றா மரைக்கயஞ் செந்நெல்வினை யுங்கழனி
நாகிளங் கதலிவளமார்
நாடுபுடை சூழ்கதிரை நாதனருள் சேரினம
னூடிடா னஞ்சிநமையே.

12. தந்தையுந் தாயருங் குரவருஞ் சுற்றமுந்
தம்பிதமை யன்மார்களுந்
தங்கையுந் தாயெனத் தகுதமக் கையர்களுந்
தரமொத்து வாழ்தாரமும்
மைந்தரும் பிறருநட் பினருமுல குறுதொடர்பு
மகிழன்ன கோசமயமாய்
வளருமிவ் வுடலுறவு காணென்று பெரியோர்கள்
வரையறுத் தேமொழிந்தார்
ஐந்தொழி லுறச்சபையி னின்றுநட நித்தமா
யாடுமம பலவாணனைத்
தாகுமுக மோடதோ முகமாறி னயனவிழி
யாறினும் பொறியாறதாய்
வந்தர சிருக்கையுங் கற்பகக் காவுமுயர்
வாழவுமம ரர்க் களித்தோய்
வரைமேவு முயர்சோலை புடைசூழ மணியாறு
வலமோடு கதிரேசனே.

13. குன்றம் பொடித்துவச் சிரமார்பு கீண்டுததி
கொள்ளுநீ ரவைகுடித்த
கூருடம் பிடிபிடித் தருடிருக் கரமிலகு
குமரனைக் கதிரைநகரிற்
கன்றப் பதங்கணடை கொண்டுசென் றேகண்டு
கவலையா னவையனைத்துங்
கட்டித் திருச்சந்நி தானத்து வைத்துக்
கழற்றுணை பணிந்து போற்றி
நின்றற்புதத்திரு வருட்பொதி தரப்பெற்று
நிறைவினுயர் மனையிலுறுவார்
நெஞ்சிற் குகா! முருக!! சரவண பவா!!!வென்று
நித்தமுஞ் சித்தமுருகி
மன்றப் புகட்கவிதை வாயார வேசொல்லி
வாழ்த்தியுடல் பொருளாவியாம்
வகையவை யனைத்தினையு முருகனிரு சரணமலர்
வைத்தமெய் யடியார்களே.

14. செங்கமல முங்குங் குமங்களுங் குன்றியுந்
திங்களுஞ் செங்குருதியுஞ்
சீரரத் தழுமனைய பாவையர்க ளுடனேறு
சிங்கேறு நிகர் காளைமார்
அங்குகின் றிம்பரும் பைம்பொனுல கும்பருந்
தம்பரம தாவுடையோன்
அம்பினிரு பங்கெனத் துன்படைய வருமசுர
னங்கம்பி ளந்த வைவேற்
புங்கவனை மங்குல்வந் தங்குவளர் மங்களம்
பொங்குமலை யடவிபுடைசூழ்
பொன்றடங் கதிரைநகர் நின்றிலங் காலயம்
புக்குளம் நெக்குருகியே
தங்களின் பந்தரும் பைங்குழவி பெறவரந்
தந்தரு ளெனத்தருகுவாய்
தஞ்சமென் றிடுமமா ருஞ்சமுன் பொருமசுரர்
தங்குலம் வென்றபரனே.

### எண்சீ ராசிரிய விருத்தம்.

15. படித்தறியேன் படித்தறிந்த மனிதரொடு பழகும்
பண்பறியேன் நாயடியேன் பாடுவது மறியேன்
முடித்தலையி லிளமதியு நதியுமணிந் தருளும்
மூர்த்திதனை வழிபாடு முயன்றுசெய்து மறியேன்
துடிக்குமுடற் பசிக்கொடுமைக் கிரக்குமவர்க் கிதமாய்ச்
சோறுமுத லுணவருத்துந் தொண்டுசெய்து மறியேன்
கடித்திருமென் மலர்களையுன் னடிக்கணணிந் தறியேன்
காப்பதெவன் கூற்றுவனைக் கதிரைமலைக் கரசே.

## வேறு சந்தம்.

16. காசு வைத்திருப் பார்துய ருற்றவர்
கண்டு கேட்டிடிற் கைவிரித் தேமனங்
கூசி டாதுரைப் பார்பல பொய்ம்மொழி
கூடி யுங்கெடுப் பார்சில பேர்களைத்
தேசு லாவு முயிர்த்திறத் தன்பிலாச்
செய்கை யாற்றுவர் தீவினை தீரவும்
ஆசை யேது முறாரிவ ருய்வரோ
அங்கை வேலர சாள்கதிரேசனே.

17. வினைய றுந்த பெருந்தவர் தாம்பெறும்
மேலை யின்பம் மிகப்பிறர் மேவிடும்
நினைவி னுணர் மெய்ந்நெறி யாவையும்
நின்று ரைத்தருள் நீதியின் சாரமாய்ப்
புனைவ தேகலை கற்றவர் செய்கடன்
போலி யான பொதிப்புழு கையகோ
வனைவ தென்ன மடமை யிவர்மயல்
மாற்று வாய்மலை வாழ்கதி ரேசனே.

18. கீர வாரிதி மேலுர காதிபன்
கேடி லாவணை மீதுயர் நாரணன்
தார மாமலர் மாதொரு மானிளந்
தாயி னீந்தருள் தாயைவில் வேடர்வாழ்
ஊரி லாகம நூன்முறை மாமணம்
ஓதி நாரத னர்செய நாணிடுந்
தீர வேலிறை வாழ்கதிர் காமமே
சேரு வார்பெறு வாரருள் திண்ணமே.

19. காசு பெற்றிடு மாசையி னல்வெறுங்
கற்ப னைபடத் தீட்டுவர் கட்டுரை
ஈச னார்த மிணையடி நாம்பெறும்
எண்ண முற்றெழு தாரொரு வாசகம்

பேசு வார்பதி பாச முயிரெனப்
பெற்ற கல்வி பிறர்க்குப காரமாம்
ஆசை யேனிவர் கொள்கில ரெட்டெனும்
ஆசை போற்று மருட்கதி ரேசனே.

20. பாடு பட்ட புலவர்கள் பாடுவார்
பாட்ட திற்குறை பண்டிதர் சொல்லுவார்
வீடு கட்டத் தெரிந்தவர் கட்டுவார்
வேண்டு மென்று பிறர்பிழை கூறுவார்
கேடு கெட்டவிம் மாநில மக்கள்பாற்
கெட்ட வஞ்சக மும்மழுக் காறுமே
கூடு கட்டி யிருப்பதற் கென்செய்வேங்
கோல மார்கதி ரைக்கும ரேசனே.

21. பாட்டி யற்றப் பயின்றநன் னுண்முதற்
பஞ்ச முற்றுப் பணம்படைத் தோர்கடம்
வீட்டி னின்று சிணுங்கி யவர்தரும்
வெஞ்சொ லேற்றுறை வீடு திரும்பினோர்
கூட்ட முண்டெனக் கூறிய காதைகள்
கொஞ்ச மல்லக் குளத்தலர் தாமரைக்
காட்டில் வாளிளை யாட்கிவை நீக்கெனக்
கதிரை நாயக கட்டளை செய்தியே.

22. தெரிகி லானல ரோனெனத் தண்டனை
செய்து செய்த சிருட்டியி லித்திறம்
வருவ தேனெனக் கேட்டிடி னீசொலும்
மாற்ற மென்ன மலைக்குற வள்ளியைக்
கரவி னுவிர விற்கவர்ந் தேபெருங்
கான கத்தவள் கற்பையுந் தந்தைமுன்
வருகு லத்தவர் தம்மையுங் கொன்றநீண்
மரம டர்ந்த வரைக்கதி ரேசனே.

23. அறிவினர்க ளறைவீட்டிரும் பலமாரியிற்சிறைபோ
யகலாவகை சிறைபட்டுறை யருமாநிதி யவையிற்
சிறிதீயினு மெனைநேர்சிலர் பலசீர்வகை புரியுந்
திறமேவரு மூலகாருயிர் பலபோகமு முனைநா

ளறியானல ரவனென் றணி கரநாலொரு முகமோ
டழகார்தரு தொழில்செய்தனை யதனலமை வுறு
வெறிசேர்மது மலர்விபுடை வருமாமணி நதிநீர் [மே
விரைவாய்வரு கதிராபுரி மிளிர்சீரறு முகனே.

## ஆறுசீர் ஆசிரிய விருத்தம்.

24. கந்தானையின் மாமுக மம்புலிவெண்
கங்காநதி சேர்சடை யைங்கரன்முன்
வந்தானிள மான்மகள் நின்னிடமே
வந்தாளழு தாள்தொழு தாளுனையென்
எந்தாய்புக லென்றிட நீயயரே
லென்றேரணி மார்புற வேதழுவிச்
சிந்தாகுல நீக்கினை தென்கதிரைச்
செந்தாமரை நேரடி சேர்குகனே.

25. வடுகுங்குச ருத்தியுங் கன்னடமும்
மலையாளமு மிந்திய மாந்திரமும்
விடுபாளி பிராகிரு தம்முதலாய்
வேறானபல் பாடை விரும்புகிலேங்
குடநின்றெழு மாமுனி கொண்டிடவேள்
கூறுந்தமி ழன்மொழி கொண்டிடுவேம்
இடமுண்டெவை யும்பெற வாழுலகோர்
எத்துங்கதிர் காம மிருப்பவனே.

26. கையிற்பல கல்விழை யுந்நகையுங்
கண்டத்தணி சங்கிலி யும்மரையின்
நொய்துற்றெழில் பட்டொளிர் பட்டுடையும்
நுவலாங்கில பாடையி லேமொழியும்
பெய்துற்றவர் பாடலி னுறெனினும்
பிழைகாணிலர் பேணுவர் பேர்பெரிதாய்
மையற்படு வோர்சிலர் தென்கதிரை
வாழுங்கலை வாணர் மனத்தவனே.

### நெடிலோசை.

பசித்தழுத குழவிதனைப் பரிந்துவிரைந் தெடுத்தணைத்துப் பாலையூட்டிச், சுசிப்படுமென் றுகிலணையிற் கிடத்தியிசைக் கவிபாடித் துயிற்றுந்தாயின், நிசிப்பகலெத் துணையுமொரு நீக்கமிலா தருட்டிருநேத் திரநோக் கியைந்து, புசிப்புதவுங் கதிரைவளர் பூரணமே காரணமிப் புவனத்தோர்க்கே.

28. அஞ்சவரி னஞ்சலெனக் கையமைத்தா னனமாறு மருட்கணைக்குஞ், செஞ்சரணத் திருக்கமல மாமலருந் திருக்கரத்திற் சிறக்கும் வேலும், மஞ்சனைய மஞ்ஞையுமாய் வந்தடியார் தமக்குயர்வாழ் வளித்துநீண்ட, தஞ்சமிகப்புரிகுமர னருட்கோலங் கதிர்காம தலத்திலாமே.

### கட்டளைக் கலித்துறை.

காப்பு.

மானிடங் கொண்டு மழுவலம் வைத்து மகிழ்ந்தபெரு
மானிடங் கொண்ட மலைமான் மகிழும் வரதனுக்காய்
மானிடங் கொண்ட வனசரர் பாவைமுன் வந்திடுங்கோ
மானிடங் கொண்டரசாளுவ னெந்தன் மனத்தகமே 1

சீர்கொண்ட பாவினந்தம்முளியன்றுள செய்யுள்செப்பிக்
கார்கொண்ட வேழ முகத்தனைப் போற்றிக் கதிரையுறும்
பார்கொண்ட யாவும் படைத்தருளீயும் பகலொளியிற்
கூர்கொண்ட வேலனை வாழ்த்தினினைத்தவைகூடுமன்றே

வருத்தந் தணியக் கிலேசங்க ணீங்கநல் வாழ்வுவரத்
திருப்பிப் படைக்குந் திறமுனக்குண்டு செழுங்கமலத்
திருக்கும் பிரம னுணரான் மறைமுத லென்றிருத்தித்
திருத்திப் படைத்தருள் தெய்வக்கதிரைத்திருச்செல்வமே

ஓதுந் துவிதத் துணைக்கண்டு முன்ன முளத்தறிந்து
வாதங்கள் செய்தறி வோருட னூல்பல வாசித்துணர்ந்
தேதமகன் றபி னத்துவிதநிலை யெய்தநிற்கும்
போதமளித்தருள் வாய்கதிர் காமத்துப் பூரணனே 4

ஊரேறு தான்யஞ் சந்தான மெய்த்தன மென்பவைகள்
போரேறு வேற்படை மாமஞ்ஞைபாங்குறைபூங்குழலார்ச்
சீரேற வாழ்த்து மடியார் பெறுவர் தெளித்துவருங்
காரேறு சோலை புடைசூழ் கதிரையிற் கந்தனையே. 5

கற்றைப் பளிங்கி னொளிநூறு கோடி கதிரவர்பாற்
சுற்றுங் கிரணத் தொகையாவு மொன்றினுந் தோற்
றொதுங்கும்
வெற்றித் தனிச்சுடர் வேலோன் கதிரையில் வீற்றிருந்து
குற்றங்களைந்தடி யார்கட்கு நல்லருள் கூட்டுவனே 6

துன்புற் றிடுவர் பிறரென்று நோக்கிலர் சொந்தமதாய்ப்
பொன்பெற் றிடவரி னேனும் புரியுமிப் பூதலத்தில்
என்பெற் றிடாவிடி னுங்கதிர்காமத் திறையவனே
நின்பற் றுயர நெறியருள் வாயிந்த நீசனுக்கே. 7

சிவலைச் சுடர்விழித் தோற்றிய சீர்க்கதி ரேசவெந்தாய்
அவலப் படக்கொடுஞ் சூர்முத லோர்கட்கயில் விடுத்தோய்
நுவலக் கமலக் கடைவிழி நோக்கி விடுத்தியெந்தன்
கவலைப் பெருமலை தூள்பட நின்றிருக் கைப்படையே. 8

வேறென்ன வேலையை யாவுனக் கெங்களை வீண்செயல்
செய்
தூறின்னல் வெம்பகை யச்சங்களெய்தி யுலையவிட்டால்
ஈறில்லி தற்பர னெல்லாமறிபவன் யாவும்வல்லான்
மாறில்லி யென்பவைபொய்யோகதிரையின்மாணிக்கமே

துடியிற் பிறப்பு மபயத்திற் காப்புஞ் சுடரெரியில்
முடிவுந் திரோதத்தை நின்றவடியினு முன்னெழுந்த
அடியிற் றிருவரு ளுங்காட்டி யம்பலத் தாடுமையன்
வடிவச் சிறுகும ரேசா கதிரையில் வாழ்குகனே. 10

பொன்னைச் சுடச்சுடர் மாற்றேறு மாயினும் பொன்
சிறிதாய்
வன்னக் கனல்பெரி தாயினென் னாகும் வளர்கதிரை

மன்னற் கருணை வடிவே துயர்க்கனல் மற்றெமக்குப்
பின்னைப் பெரிது பெரிதிவை மாற்றலுன் பேரருளே. 11

பொன்னை மணிகளைத் தாரணி தன்னைப் புதல்வர்களை
மின்னை முதற்பல பேறுகள் வேண்டுவர் மேதினியோர்
உன்னை நினைத்திடுஞ் சித்தமு முட்டெளி வும்முடனே
பின்னை யெமக்குத வாய்கதிர்காமப் பெருந்தகையே. 12

நாயாய் மறைகள்பின் னேவர வேடுவர் நாதனெனப்
பேயோடு மாடும் பிரான்பார்த்தற் காயுதப் பேறுதவப்
போயாடி வில்லடி பட்டவன் றேதென் புனக்கதிரைச்
சேயே புமைகரத் தோர்சிசு வாகத் திகைத்தனையே. 13

மனையாளு மைந்தனுஞ் சுற்றத் தவரும் வளைத்துநிற்கத்
தனையேசி விற்கொண் டடித்தவற் கோர்படை தந்தை
தந்தான்
விளையோரை வாட்டெனக்கல்லார்கதிரை விரும்பிறைவா
உனையா தரிக்கு மெனைவாட்டு வோர்க் கென்ன
வுன்செயலே 14

இடைபிங் கலைதடுத் தாதார மூலத் திருந்துமென்மேல்
நடைகொண்டு நாட்டத் திருநீழ் புருவ நடுவிலுற்றால்
விடமுண்ட கண்ட னடனின்று காணும் விதம்பெறநல்
விடமுண் டென்பார்கதி ரேசா பெறுதற் கியைந்தருளே.

இகழ்வார் பிறரவை நோக்காமலுன் றனிணைமலர்த்தாண்
முகிழ்தா மரைமல ரஞ்சலித் தேத்தி மொழிந்ததிருப்
புகழோதி யோதி யழுதுன் னடியிற் புகலடைவார்
மகிழ்வார் கதிரையிற் கற்பக மேநல்ல வாழ்வுபெற்றே. 16

ஆக்கங்க ளீந்தெமை யாதரிப் பாயென் றகமுருகி [ந்து
நாககொண்டு சொல்லியுன் னாமங்கள் போற்றி நடந்தலை
மீக்கொண்ட வூரும் மலைசோலைசூழ்ந்த வியன்கதிரைப்
பூக்கொண்ட கோயில்கண் டானந்தங் கொள்வர்
புனிதர்களே 17

நொய்யபட்டாடையும் பொன்மணிப் பூண்களு நாதனமார்
கையிற் கடிகை யுணர்த்துங் கருவியுங் கட்டிவிரைந்
தெய்திக் கதிரையி லுன்னைத் தொழுஞ்செல்வ ரென்ன
சொல்வார்
மையுங் கலையுடுத்தாலயஞ் சூழ்வரும் நங்களையே. 18

உள்ளத்தை யாலய மாக்கொண்ட நின்னை யுணர்ந்து
கண்ணீர்
விள்ளத் துயர்களைந் தாட்கொள்ளு வாயென வேண்டு
மெங்கோள்
கொள்ளப் படுமென் றுறுதிகொண் டேயிருட் கொண்
டல்மின்போல்
வள்ளிக்குளங்கொண்டு வாழ்கதிர் காமம் வளர்தெய்வமே.

நித்திய மற்ற வுலகப் பொருட்களி னேயமுற்றுற்
சித்த மதிற்சிறி துன்னையெண் ணாது தேய்த்தவர்கட்
குத்தம மான வுணர்ச்சி யளிக்கு முபாயத்தினுல்
வைத்தருள் வாய்துயர்தெனகதிரேசநின் வண்மையிதே.

வச்சிர மார்பும் மலையும் பிளந்த வடிநெடுவேற்
கைச்சிறு மெல்லிதட் செங்கடம் பாரங் கவினுறுதோட்
பச்சிளம் பால கதிரைப் பதியிற் பயின்றடியார்
இச்சை தவிர்ப்பவ னேதவிர்ப் பாயெம திச்சைகளே. 21

இந்திர போகங்கள் பெற்றிட வேண்டுமென் றெண்ணி
யெண்ணி
நொந்து வருந்துவர் "செய்தவம்" என்றுநன் னூலு
ரைத்தல்
சிந்தைகொள் ளார்பிறர்க் குத்துயர் செய்வது சிந்தை
கொள்வார்
உய்ந்திடு மாறெங்ங னேகதிர் காம முகந்தவனே. 22

கரணங்க ளொத்து வழிபா டியற்றல் கடனதன்றி [றே
வரமென்று முன்னைப் பெறுமா றிரத்தல் வழுவதென்
திருவந்த தொல்லைநன் னூல்பலசெப்பவுந் தென்கதிரைப்
பரவந்து வேண்டுவ மெல்லாந் துயர்ப்பட்டபாடவையே 23

ஆக்குதல் காத்த லழித்தல் மறைத்த லருளலென்ற [ந்து
மீக்குய ரைந்து வினைகள்செய் வாய்நின் று மெய்ந்நிறை
நீக்கமற் றெங்கும் மலர்ப்பொழில் சூழ்புன நீண்மலையாய்
ஏக்கமுற் றேகவல் வாரறி யாரிஃ தென்மடனே. 24

காற்றுன பிண்டத்திற் கட்டிவைத் தாலன்ன காயங்களி
லூற்றுன கால்பெற் றுயிர்வாழ் பவரொரு வர்க்கொருவர்
மாற்று னவைசெயிற் றூமும் பெறவரும் மாண்பறியார்
கூற்றுவர் தாந்தமக் கேகதி காமக் குலவிளக்கே. 25

கையணி காலுக் குதவா கழுத்தணி கைக்குதவா
செய்யுங் கருவி தொழில்களுக் கேற்ற திறம்பெறுமால்
ஐயன் கருமமைந் தாற்றலு மற்று மடைவிதென்றே
உய்யும் வழியுணர்வித்தாய் கதிரை யுகந்தவனே. 26

தேனோடு பால்கலந் தாலெனத் தித்திக்குஞ் செந்தமிழின்
காரு மிருதக் கவிபாடி நெஞ்சங் கசிந்துருகிப்
பூநாறு சேவடிக் கன்பூறி நின்று புகட்கதிரை
ஞான கரனை யுளத்துணர் வார்சிவ ஞானிகளே. 27

மந்திர மாகி மணியாய் மருந்தொடு மற்றுமுள
தந்திர மாகி யகம்புறம் மேய சகலபிணி
சிந்தி யலர்ந்த மலர்முகக் காட்சி சிறந்தடியார்
வந்தனை யேற்றருள் செய்வாய் கதிரை மணிவிளக்கே. 28

தரியாது வந்து னிணைமலர்த் தாடரி சித்துமனம்
உருகாநின் றஞ்சலிசெய்தேத்துமன்பருளத்துணர்ந்தோர்
தெரியா மறைமுடி வேகதிரேச திறந்தெரிந்தோ
தெரியாம லோசெய் பிழைபொறுத் தாழ்வதுன்
செய்கடனே. 29

எல்லா முடைமை யுனதென் றறியு மியல்புணர்ந்தோர்
நில்லா வுடலையும் வாழ்வையு மேதும் நினைந்துமையார்
பல்லா யிரமுயிர் தோறும் நிறைந்து பரிந்தருள்செய்
வல்லா யுனைக்கதிர் காமத்துங் கண்டு வழுத்துவமே. 30

பெண்பால் மகப்பெற்று வையக வாழ்வுபெருக்குதலாண்
திண்பாலீர் மற்றைய செய்வினை யாற்றல் சிறப்பதென்ற
நுண்பா வுரைத்துச் செயன்முறைகாட்டினர்நூலறிவோர்
கண்போல வாழ்வு தருவாய் கதிரையிற் கற்பகமே. 31

இமயத்தி லம்மை மணநோக்க யாவரு மெய்திநின்ற
அமையத்தி லேவட பால்தாழ்ந்திடுத லு மங்குநின்றோர்
சுமையுட் பொதிய மலைபுக் குறவிடுந் தூயனுளத்
தமையத் தமிழ்தெரித் தாய்கதிர் காமத் தமர்ந்தவனே 32

நின்றுசை யாதி யுளக்கொள் கலத்தி னிரப்பிவிட்டால்
குன்றுத சோதி யருள்வைப்ப தெவ்வுடை கூறுமிதோ
மன்றுடி யைந்தொழில் செய்வானருண்மகன் வாழ்கதிரை
சென்றுடி யாலயஞ் சூழ்ந்தாலு மென்பயன்சேருவதே 33

பாரகத் தேமலை தோறுமெய்ப் பாரகம் பங்கொழியச்
சூரகத் தேறயில் தோளுடன் வீரந் தொடர்ந்தகழல்
வாரகத் தேநின் றொலிக்க நடம்பயில் வள்ளலுனை
ஏரகத் தாய்கதிர் காமத்துளாயென் றிசைப்பர்களே. 34

உன்னைத் துதிக்கின்ற செல்வமுண்டேன்மற் றொருகுறை
என்னைத் தொடாகர மாறிரண் டின்முன மெய்தி [யும்
வன்னப் படைக் கடவுட்குழு வேறு மயலுறுமோ [நின்ற
கன்னிக் கதிரை யிருந்தர சாண்டருள் காவலனே. 35

அச்சங் கடன்பிணி மூவல் லசுரரைச் சங்கரிக்கும்
மூச்சுடர்க் கூரயில் கைக்கொண்ட வாறுமுகப்பெருமான்
பச்சை மயூரத்தி னெண்டிசை தோறும் பயின்றடியார்
இச்சையின் மீண்டு கதிரைச் சினகரத் தெய்தினனே. 35

வடகதி ரைப்பதி யென்றிந்த மாநிலம் வாழ்த்துகருங்
கடலலை யோசைத் திருச்செல்வச் சந்நிதிக் கந்தன்முன்
யடுசுவைசேர்த்தடியார்க் கன்னதான மளிப்பவர்பாற்[னே
தொடர்பிணி யாவும் பரிதிமுன் னல்லெனத் தோற்கு
மன்றே 37

நாளாறு வெஞ்சமர் நின்னுட னாற்றி நடுங்கவிண்ணோர்
கோளா றியற்றிய சூரனை யின்னருள் கொண்டளித்தே
யாளாக் கினைதுதிக் கின்றேற மருந்துய ரால்வருந்தி
மீளாக் கவலைப் படக்கதி ரேசவிடுவ தென்னே. 38

வேதா தியான குடிலையின் மெய்ப்பொரு ளின்விளக்கம்
ஓதா தயன்மய லுற்றா னமக்க துணரவற்றோ
நாதா தியான கதிரேச னுள்ளினயந்துறைந்தே
ஓதா துணர்த்திடி னெல்லா முணர்த லொருதலையே. 39

அரசன் குருத்தந்தை யாசிரி யன்பதி யாமிவர்சொற்
பிரசைகள் சீடர்கள் புத்திரர் மாணர் பெண்டிரென்போர்
வ்யமென்று கைக்கொள்வ தேகன்மயோக வழியெனநூல்
தருமெய் யமையிற் கதிரேச ஞாலந் தழைக்குமன்றே. 40

அடைகின்ற நாயக தானத்தைச் சேரு மதரனந்தம்
படுமவற் றின்பிர யாண விதிகளும் பற்பலவாம்
இடைகடை யாதியுண் டெவ்வழி யாரதி லெட்டுணைமா
சுடைமையின் றேனுய்ய லாமே கதிரை யுகந்தவனே. 41

பிணியென்ற மெய்ப்பகை வந்துற்ற பின்னர்ப் பெரு மருந்தும்
மணிமந் திரங்களுந் தேடி யலைவரிம் மாநிலத்தோர்
அணியொன்று மாசன யோகப் பயிற்சியை யாதரித்தால்
துணிபொன்ற நோயென் றறியார் கதிரைச் சுடருருவே.

நஞ்சுண் டிருண்ட திருக்கண்டர் நெற்றியி னல்விழிகள்
அஞ்சொன் றி னின்று சுடருரு வாகி யவதரித்தோய்
மஞ்சொன்று தென்கதி ரைக்கோயி லுண்டுனை வாழ்த்துமெந்தன்
நெஞ்சுண் டரிய திருவடிப் பங்கய நீண்மலர்க்கே. 43

கையுண்டு கும்பிடச் சுற்றி வலம்வரக் கால்களுண்டு
மையுண்ட கண்ணுண் டழப்போற்ற வாயுண்டு வாழ்வு முண்டே
நெய்யுண்டு பால்தயிர் சர்க்கரை தேனுண்டு னீழ்முடியிற்
பெய்யுண் டடிற்கதி ரேசா குறைவென்ன பின்னெமக்கே

காலிற் கழலுங் கரத்திற் கணையுங் கவின்கச்சையும்
மாலைப் புயங்களும் மற்றக் கரத்தில் வரிந்த வில்லும்
நீலக் குடுமியு மாகிக் குறத்தியை நீழ்கதிரைக்
கோலப் புனத்துமுன் காதலித்தாயெனக் கூறினரே. 45

ஆறுண்டு மாமுகங் கைவிழி பன்னிரண் டாகவுண்டு
வேறுண்டு தெய்வப் படைக்கலம் வேலுண்டு வீரமுண்டே
மாறுண் டெனுதபல் வீரர்க ளுண்டு மறலிவந்தால்
ஊறுண் டுனைத்தொழு மெம்பாற் கதிரை யுகந்தவனே 46

பாட்டணி யென்றொன் றகத்திய னார்முதற் பல்லறிஞர்
காட்டின ராங்கவை கட்கமை வாகக் கவிக்குலங்கள்
தீட்டிட லன்றி மனம்போன போக்கிற் சிலரெழுதிப்
போட்டிடு வாரச்சிற் தென்கதி ரேச புதுமையென்னே.

ஆடுந் திருத்தில்லை யம்பல வாணனு மம்பிகையுங்
கூடுந் நடுத்திசை நீயிருந் துற்றநற் கோலத்தையே
பாடும் பெரும்புல வோர்களு முந்தனைப் பைங்கிரியுங்
காடுஞ் சுழல்கதிர் காமத்தி லேவந்து காணுவரே. 48

ஆளாக் குளக்குறி நாழிக ளாய வளவை கொண்டே
மீளாத் துயரளந் தேகொடுப் பாயிந்த மேதினியோர்க்
கூழாய்ப் பறைகொண் டளந்தெனை யுண்ணவைத்
துன்னடிகட்
காளாக் கினைகதி ரேசா கருணையி னற்புதமே. 49.

பெற்றவ ராக்கந் திறமை தமதெனப் பேசுவர்கே
டுற்றவர் மற்றவ ரேதுவென் பார்வரு மூழறியார்
கற்றவர் தாமுஞ் சிலபோ தயர்வர் கதிரையில்வாழ்
கொற்றவ னைய லகற்றிநல வாழ்வு கொடுத்தருளே. 50

மண்ணுண்டு பொன்னுண்டுவாழவும் பூணவும் மற்றவைக்குப்
பெண்ணுண்டுகாணநினைக்கத் துதித்திடப்பேசுமுன்னைக்
கண்ணுண்டு நெஞ்சுண்டு வாயுண்டு நீயுண்டு காணெனக்குப்
பண்ணுண்டு பாடிடத் தென்கதிர் காமத்தைப் பத்தர்கட்கே

புத்திசித் தத்தினிற் செல்வர்க ளாவதும் புத்திமட்டாய்
மெத்த வறியவ ராவது மில்லையிம் மேதினியில்
அத்தன் சுகந்துயர் முன்வினை வண்ணமளப்பனென்றே
கத்துநன் நூல்கதிர் காமத் துறைந்தருள் கற்பகமே. 52

முதலாளி யீசன் தொழிலாளர் தேவர் முகுந்தனவர்க்
கதிகாரி பால்கடைந் தண்டர்க் கமுதை யரிக்கலரின்
பதியான் செல்வியைக் கூலியதாகப்பகிர்ந்து நஞ்சை
நிதியாகக் கொண்டவன் மைந்தா கதிரை நிதிக்குவையே.

ஆட்டுக்குத் தில்லையை வைத்தவன் பால னடுங்குறவர்
காட்டுக்குள் மான்கன்றைத் தேடிச்சென் றூன்கதிர்
காமத்திலே
வீட்டுக்குச் செல்ல வழிவகுத் தானிந்த மேதினியோர்
நாட்டுக்குள் ஞானம் பிதற்றுவ ரென்ன நடப்பிதுவே. 54

தேன்பாயும் பூம்பொழிற் றென்கதிர் காமத்திற் செம்மை
மான்பாயுந் தந்தி மதம்பாயு மந்திகள் பாயுமலர்க் [திகழ்
கான்பாயு மாணிக்க கங்கையும் பாயுங் கருதலர்கள்
ஊன்பாயும் வேல னுளம்பாயு மன்பருரைப்பவையே. 55

நீரேறு வேணியன் தீயேறு கண்களி னின்றெழுந்த
தாரேறு செங்கடப் பந்துணர்த் தோழிறை தானவர்கள்
போரேறு வேலு மருளேறு கண்களும் பூமடமின்
னாரோ டணிமயி லேறிக் கதிரைநின் றுடுவனே. 56

ஆரும் பெறுநல்ல பேறெய்த லாமரு ளாறெய்தலாம்
சீரெய்த லாமருள் தானெய்த லாந்திருச் சேர்வெய்தலாம்
பேரெய்த லாங்கலைப் பேறெய்த லாம்பின்புவீடெய்தலாங்
காரெய் துலாம்மலை சார்கதிர் காமமுட் கண்டவரே. 67

பதியும் பதிசாத் திரங்களு முண்டு படித்துணர்ந்து
விதியின் படியொழு காதவர் யாவரும் வீணர்களே
மதியுண் டுணர மனமுண்டு கண்ணுண்டு வாய்செவியுண்
டெதுசெய்ய நீபடைத் தாய்கதிர் காம மிருப்பவனே. 58

வீட்டுக்குப் பஞ்சமென் றேடி யலைவரிம் மேதினியில்
ஆட்டுக் குகந்தவன் பாலனை யாலய மார்கதிரைக்
காட்டுக்குட் கண்டு முறையிடு செய்யிற் கனகமிளிர்
நாட்டுக்கும் மேலுள வீட்டுக்கும் போக நயக்குமன்றே. 59

கள்ளுக் குடிப்பர்பின் ஞடுவர் கூடுவர் கைகுவிப்பார்
தள்ளுப் படுவர் தகாதன பேசுவர் சாமியென்று [ஞர்
மெள்ளப் புகன்றுமெய்ஞ் ஞானங்கள் பேசுவர் மேலறி
உள்ளத் துணர்கதிர் காமத் துரிமை யுவர்க்கென்னவே.

சுவையாறு சேர்த்தன்னம் மெத்தவுண் டுந்திச் சருக்
கொழிப்பார்
குவையாய் நிதியைத் திரட்டுவர் வேறு குறிக்கிலர்கார்க்
கவைசேர் கடற்படி மாந்தர் சிலரிக் கருத்தமைவார்
இவையோ மனுத்தன்ம மெந்தாய் கதிரை யிருப்பவனே.

பெண்பிள்ளை முன்னர்ப் பிறந்து பராயம் பெருத்தவுடன்
நண்புள்ள வில்லிற் குரவோர் துறவை நயந்தகன்ற
மண்கொள்ள வில்லைத் தவர்போன் றிருப்பர் மறை
யொலிபோய்
விண்கொள்ளுந் தென்கதிர் காமம் விரும்பியவித்தகனே

தொன்னூல் பயில்கலை தூய்தானசெல்வஞ்சுகங்களென்ற
முன்னீர் மதங்கள் பொழியானை மாமுக முன்னவனை
யிக்கே ரிழையெமக் கெய்தரு ளென்றிரந் தெய்திநின்ற
பொன்னேர் கதிரையின் மாமணக்கோலம்புனைந்தவனே

பொய்யாம லேசிந்தை வாக்குற மேனி புனிதமதாய்
மெய்யா கமத்து நியமங்கள் யாவும் விதிப்படியே
செய்தாய்ந்த பூவடி சூட்டித் தொழுபவர் தென்கதிரை
யெய்தா ரெனிற்பெறு வாரோ மனத்தி லிருப்பவையே.

கூடாத நஞ்சினைத் தானுண் டமுதைக் கொடுத்தருளி
வாடாமல் வானமர் தேவரைக் காத்தருள் வானருளுஞ்
சூடா மணிச்சிறு பாலா கதிரைச் சுடர்விளக்கே
யோடாதவல்வினையோட்டிநல் வாழ்க்கையுகந்தருளே. 65

கந்தா ஞக்ரகடம் பாகும ராமலைக் கன்னியிளம்
மைந்தா குறக்குல வள்ளி மணாளவிண் வானவர்கோன்
சிந்தா மணிக்கருணையக மாயவன் சீர்மருகா
வந்தா தரியென வந்தோர் கதிரையின் வந்திப்பரே. 66

கண்ணகல் வாழ்க்கை தனமேவல் மிக்குறுங் காலத்திலே
யெண்ணுவர் தாஞ்செயற் கல்லாத வில்லையென் றின்ப
மற்று
மண்ணுமற்றேமற் றிறுகாலை யுன்செயல் வானவவீ
துண்மையென் பார்கதி ரேசா வுவர்க்கறி வூட்டுதியே. 67

காலால் வலம்வந்து மையார் விழிகள் கலங்கியழ [யாள்
மேலால் வணங்கிக் கரங்கூப்பி மண்ணில் விழுந்துமை
பாலாகின் னாமங்கள் பாடித் துதிக்கின்ற பத்தர்துயர்
வேலாற் பொடிபடுப் பாய்கதிர் காமம் விரும்பிறையே. 68

ஆறக் கரமென்ற வாள்கொண்டு நாளு மரிந்தரிந்து
சீறும் வினைத்துயர் போக்கிவிட் டாலுன் றிருக்கருணைப்
பேறுக் குரியவ ராவார் பிறவிப் பெருந்துயரும்
மாறிச் சுகம்பெற லாமே கதிரை மணிவிளக்கே. 69

மூதிரை வளம்படு சாரலின் வேடுவர் மொய்த்துறையுங்
கதிரை மலைத்திருக் கோலத்தைக் கண்டுகளிப் பவர்க்குத்
துதியுங் கலையுந் தனம்பயில் வாழ்க்கையுந் தூய்மையுநன்
மதியுங் கரும விருத்தியுஞ் சேர வழங்குவையே. 70

அரிதான சொன்மறை யாகம சாரங்க ளாலருணை
கிரிநாத னோது புகழ்மாலை கேட்டருள் கேள்வியினால்
விரிவான சொற்பொரு ளில்லாக் கலித்துறை யோட்கு
மென்றே
பரிதாப மோடுரைத் தேன்கதி ரேசவிப் பாடல்களே. 71

உமையாள் குமரன் திருச்செல்வச் சந்நிதி யுற்றுநின்றே
ஏழையா ளெமக்குப் புகல்வேறொன் றில்லையென்
றேத்துமன்பர்க்

கிமையோர் படைமுதல் சேயோன் கதிரைக் கிறை நிறைந்த
சுமையாய் வழங்கு மருள்மாநிதிபுகழ் சொற்கலையே. 72

எழுவார் பிறவித் துயர்கடந் தக்கரை யெய்த வெண்ணித்
தொழுவார் சினகரஞ் சுற்றுவர்பாடித் துதித்துமண்மேல்
விழுவார் புரளுவர் கைகூப்பி நின்று விதியைநொந்தே
யழுவா ரிவர்களுய் வாரே கதிரை யறத்தெய்வமே. 73

என்னு யகன்குறிஞ் சித்தினை நாயக னேழுலகுந்
தன்னு யகனென்று சாற்றிய நாயகன் தாவில் விண்ணோர்
நன்னு யகன்குற மங்கைவிண் ணோர்மக ளுயகன்வேற்
கைநா யகன்கதிர் காமத்து நாயக கையடையே. 74

ஓங்கார முன்வரப் பின்வரு மாறெழுத் துண்மைதனை
ஆங்கார நீக்கிச்சினம் போக்கித் தூயபண் பானவைகள்
நீங்காம னிற்பவர்க் குள்ளே தெளிவுற நின்றுணர்த்தும்
பாங்காய் மணிக்கங்கை பாயுங் கதிரைப் பதிப்பதியே. 75

வள்ளுவ னீதியுந் தொல்காப் பியங்களு மாண்புகளுந்
தெள்ளிதி னுய்ந்துணர் மூதறி வோர்கவி செய்வதல்லால்
எள்ளுவர் யான்கவி சொன்னதென் றூற்கதி ரேசவிவை
கொள்ளுதி வேடுவ மாதைக் கரவினிற் கொண்டவனே.

உண்டொன்று தெய்வமென் றூன்றோர்கள் வாத முரைத்துணர்ந்து
கண்டன்று சாத்திரஞ் செய்துவைத் தார்கரு தாமலவை
பண்டின்று தெய்வமென் றூரின்று மேசிலர் பாரதனிற்
குண்டொன்று நீர்புடை சூழுங் கதிரையிற்கொற்றவனே.

பிறந்துண்டு வாழ்ந்திறந் தோரைப் பதியெனப் பேசி யெல்லாம்
அறிந்தவ ராக நடிக்கின்ற பேர்களை யாதரிப்போர்
திறந்தன்னை யென்செய்வ தையா கதிரைச் சினகரத்து
நிறைந்தன்பர் செய்யும் வழிபா டுவந்தரு ளிர்க்குணனே.

வற்றிய நீருங் கயத்தின் முதலையும் வந்துகராப்,
பற்றியுண் டாவி பிரிந்த மகன்வரப் பாடல்பத்துச்
சொற்றருட் சுந்தரன் சைவ சமயத் தொழும்புனல்லால்
மற்றொரு தெய்வமன் றேகதிர் காமம் வளர்தெய்வமே. 79

பிள்ளைக் குரங்கினைத் தாய்கொண்டு தாவும்பெருமரங்கள்
கொள்ளுஞ் சுடரொளி பாயாத சோலையிற் கூவுகுயில்
வள்ளிக்குத் தூது மொழிசென்று கூறிய வான்கதிரைக்
கள்ளத் திருமுரு கையா வடைக்கலங் காத்தருளே. 80

தாயாகி யுந்தருந் தந்தையு மாகித் தகுமுறவாய்த்
தூயா தரவுசெய் துன்மலர்த் தாழ்க டொழுமடியார்க்
கோயாம லாக்க முதவுகின் றுயவற் றோர்சிலமற்
றீயா யெமக்குப் பொழில்சூழ் கதிரை யிருப்பவனே. 81

சித்தாந்த சாத்திர மெய்கண்ட பேர்களுந் தேர்வரிய
சுத்தாந்த பூரண சோதிமெய்ஞ் ஞானச் சுடருருவே
இத்தா ரணியினிற் றுய்ப்பவை துய்த்தபின் வீறகன்ற
சந்தான வாழ்வு தருவாய் கதிரையிற் சண்முகனே. 82

மறவாம லுன்னிரு மாமலர்ப் பாதம் வழுத்திநிதம்
உறுமாறு செய்யு மருளோ துயரெனக் குற்றவிதங்
குறையாத செல்வந் திளைத்திட்ட போதுங் குவைபெருந்
திறைவாகின் பொன்மலர்ச் சேவடி போற்றுவ
வீதுண்மையே. 83

கருமா லயங்களிற் றேசத்தொண் டாற்றுவர் காலையினும்
வருமாலை நேரத்துஞ் செய்கட னாற்றும் வகையுணரார்
அருவாழ் விகந்து நிலைநீங்கு போழ்திவர்க் கார்துணைநீழ்
திருமால் மருக கதிரேச ஞானந் தெரிக்குதியே. 84

இறைமொழி யான சுருதிக ளாமெழு தாமறைபின்
மறைமொழி கட்கு மதீதம தாக மறைந்துநிற்கும்

கிறையொழி யேழ்முடி மாமலை யாலய நின்றடியார்
குறையொழி யாறு முகத்திரு நீடருட் கோலமன்றே. 85

சமையங்கள் சாதி பெருமை சிறுமைகள் தானவனீ [றுச்
அமையங்க ளாண்பெண் ணுறவு பகைவெறுப் பார்வமற்
சிமையங்கொ ளாலயத் தேசச்சிதானந்த சின்மயமாய்
அமையும் பொருளினைத் தென்கதிர் காமத்தறிந்துய்ம்
மினே. 86

கலையேறு வேற்கைக் கதிரையிற் கந்தன் கவிபடித்து
மலையேறு வோர்க ணிலையேறு வார்கள் மயலகன்றே
சிலையேறு மாரனை வெண்கயி லாயத்துத் தீத்திமப்பொன்
மலையேறி யீந்துயிர் வாழ்வீந்த முக்கணன் மாமகனே. 87

ஈராறு தோளுங் கடம்பலர் மாலையு மேற்றகொடுஞ்
சூராறு நாவிற் றொலைத்தவை வேலுஞ் சுரித்தகுழற்
காரேறு மாதர்கள் பக்கமுங் கண்டு கதிரைநகர்ச்
சீரேற வந்துனைச் சேவிக்கும் பாக்கியஞ் சேர்த்தருளே

ஆறு முகத்துக்கும் பன்னிரு கைக்கு மருள்விழிக்கும்
ஏறு மயிலுக்கும் வேலுக்குஞ் சேவ லிருங்கொடிக்கும்
வீறு சதங்கைத் திருவடிக் கும்மலை மேற்கதிரை
ஏறு மடியா ரடைக்கலங் காத்தரு வீகுதியே. 89

நிறையு மறிவருள் கொல்லாமை யன்பு நெடியதவம்
பொறை வாய்மை யைந்து பொறியை யடக்க லெனப்
புகல்பூ
இறைவனின் சீரடிக் கிட்டகப் பூசை யியற்றுநரும்
உறுவர் கதிரையி லுன்றிருத் தாழ்கண் டுவப்பதற்கே. 90

எந்தப் பிறப்பினு மிந்தமண் மண்டலத் தெங்களுக்குச்
சொந்தத்தில் வீடில்லை யிந்தத் துயர்கெடத் தோகையின்
அந்தத் திருக்கதிர் காமத்தி லேவிளை யாடும்பிரான் [மேல்
வந்துற்ற பேர்களைச் சொந்தத்தில் வீடெய்த வாழ்
விக்குமே. 91

நீல மலரி செழும்புன்னை பாதிரி நீழ்கயத்தின்
பாலுறு செய்ய பதும மிதட்சம் பகமெருக்குக்
கோல வலம்புரித் தூமல ரிட்டுனைக் கும்பிடுவோர்
பாலிலை வேலை கதிரேச கூற்றன் படைகளுக்கே. 92

திருமஞ் சனமலர் தீபநை வேத்தியஞ் சேர்ந்தவைகள்
தருகின்ற பூசை புரிவதற் கோபுறச் சார்புதுணை
வருமன்பு சேர விதயத்தி லுன்னை வழுத்திமனம்
உருகுந் திறமருள் வாய்தென் கதிரை யுகந்தவனே. 93

தருவீ ழிலையொன் றிரண்டுயிர் பெற்றுத் தரையினுநீர்
உருவாய்ப்பறவையு மீனுமென் றூகி யுயர்நியமத்
தொருகி ரணத்துய ராக்கிய வேலையி லுற்றுவைவேல்
பெருவாழ் வளிக்க வுதவுங் கதிரைப் பெருந்தகையே. 94

பாடுபட் டோர்சில பேறடை வாரொரு பாடுமின்றிக்
கூடுகிற் பார்பல பேறுக ளீது குறித்துமனம்
வாடுகிற் பார்சிலர் செய்தவத் தால்வரு மாறிதென
நாடுகிற் பாரிலை தென்கதிர் காம நயந்தவனே. 95

துறந்தோ ரருந்த சுகம்பெறு வார்துற வார்திரைபோற்
பிறந்தே சிறிய சுகமுந் துயரமும் பெற்றிடுவார்
அறந்தா னருளைப் பெறுமாறு தென்கதி ராபுரியில்
உறைந்தோய் மறந்தனை யோவெமக் கின்னரு ளூட்டுதற்கே 96

உலகத் தொழில்புரி சாலையி லோடி யுலைந்தலுத்து
விலகத் திடங்கொண் டுனைத்தேடி வந்து விளங்குமிரு
கலகக் கடைவிழி யார்புடை மேவக் கதிரையிலுன்
திலகத் திருமுகங் கண்டா லுளத்துள சித்திக்குமே. 97

மாதனங் கூட்டுவ ரீயார் தமையொறுப் பார்மலிந்தால்
ஆதனம் வாங்குவர் பெண்வேண்டில் வீடு மணியுமிக்க
சீதன மாயிர மாயிரங் கேட்பர் சிறிதுங்கொடார்
ஓதன மற்றவர்க் கென்னே கதிரை யுகந்தவனே. 98

பெண்ணுக்கு நல்ல வரன்வாய்த் திடில்முனம் பெற்
றெடுத்துக்
கண்ணுக் கிமையெனக் காத்துள தாயைநற் கல்விமுதல்
மண்ணுக் குளபல சீர்செய்த தந்தையை மற்றவரை
யெண்ணுற் றிடார்மக்க ளோகதிர் காமத் திருப்பவனே.

கூர்விழி பன்னிரண் டொன்றின் கடையிற் குறித்தரு
ஆர்துயர் காலெரி முன்னூறு பஞ்சி னழிந்திடுமேழ் [ளின்
சீர்முடி சேர்மலை மீதருண் மாமழை தென்கதிரை
கார்முகில் போலறு மாமுக வந்தெமைக் காத்தருளே. 100

பொன்னார் திருவடி போற்றி திருக்கரம் புக்கிலங்கும்
மின்னா ரிலைபயில் போற்றிவிண் ணோர்மகள் வேடர்மகள்
தன்னா ரடித்துணை போற்றி கதிரையிற் சண்முகனின்
கொன்னார் மயில்குக் குடங்களும் போற்றி குறித்தருளே.

கொலைபாவ மென்றொப்புக் கொள்வார் மனிதரைக்
கோறலன்றி
யிலைபாவ மென்று பொருந்தாகிய மிசைத்தொரைந்து
நிலையா மறிவு பெறுமுயிர் வர்க்க நிதமுங்கொல்வார்
சிலைசேர் கதிரையிற் செல்வா வறிவின் றிறமிதென்னே.

கொன்று புசிப்பது பாவமென் பார்பிறர் கொன்று
தந்தாற்
தின்று சுகிப்பது நன்றென்பர் கொன்றவர் நீநரகஞ்
சென்று துயர்ப்படு மாறவை யெட்டுணை சிந்தைசெய்யார்
குன்று சிறந்த கதிரை யுறைந்தருள் கொற்றவனே. 103

மந்திரஞ் சொல்லி யறுத்துச் சமைத்தந்த மாமிசத்தைத்
தந்திர மாய்மிகச் சாப்பிடு வார்வருத் தந்தணிவோ
மந்திரஞ் சொல்லிடி னிந்தக் கொடுஞ்செயல் மையலையா
சிந்துரஞ் சூழ்பொழிற் றென்கதி ராபுரி சேர்தெய்வமே.

பழமையு மாசிய நாட்டிற் குரியபண் பாடுமுள்ள
அழகிய சைவத் திறனையிந் நாட்டி லவதரித்தோர்
முழுவது மாதரிக் கின்றநந் நாளை முடுக்குமருட்
குழக கதிரையிற் கோயில்கொ[illegible]ண்டருள்
கொற்றவனே.

## நூற்பயன்.

---

### 12 சீர் ஆசிரிய விருத்தம்.

அன்னிய ராட்சியில் மூடிய கண்க
ளகன்று திறந்திடுமிவ்
வாரிய நாட்டுறு பண்புகள் யாவு
மகம்புற முற்றுமுறுந்
தன்னிக ரில்லவ ளைய வேலை
சரிப்படு நெல்விளையத்
தாரணி நீர்வள மாமுகில் பெய்து
தழைக்கு மிராசரிகம்
முன்னையி னன்கு விருத்தி யுறும்பெறு
மாஸ்திக முன்னுறுநன்
மூதறி வாளர்க ளாதர வெய்துவர்
மோக மகன்றுகெடும்
வன்னியி னின்று முளைத்த குமாரன்
மகிழ்ந்த பழங்கதிரை
வந்தவர் பாட வரும்பிர பந்த
வழக்கை யுணர்ந்திடினே.